தவறான ஒரு எண்ணம் உண்டாகி இருப்பதாக தெரிய வருகிறது. அங்கு முதல் மந்திரி அவர்கள் பேசிய காரணமாக இப்படிப்பட்ட ஒரு எண்ணம் நீண்ட நாட்களாகவே அங்கே தொடர்ந்து இருந்து வருகிறது என்பது கனம் நிதி அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: பேப்பரில் வந்தது என்ன, என்ன சொல்லுகிறார்கள் என்பதைப்பற்றியெல்லாம் கவலை இல்லை. என்னவேண்டுமானாலும் பேப்பரில் எழுதலாம். ஆனால் எந்த விதத்திலாவது அதிருப்தி அடைந்திருக்கலாம். ஆனால் அந்த விஷயம் இப்பொழுது பரிசீலனையில் இருந்து வருகிறது. அதைப்பற்றி ஆலோசனை செய்து பள்ளிக்கூடத்தை ஆரம்பிக்க ஏற்பாடு கூடிய சீக்கிரத்தில் செய்யப்படும்.

Conference of District Medical Officers

* 141 *Q*.—SRI S. LAZAR: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether a conference of District Medical Officers was held at Ootacamund in May 1959;

(*b*) if so, the subjects discussed;

(*c*) the decisions taken; and

(*d*) such of the decisions proposed to be implemented during the current Budget year?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) Yes.

(*b*) & (*c*) A statement[a] is placed on the table of the House.

(*d*) Detailed proposals on the various recommendations are awaited by the Government.

SRI S. M. ANNAMALAI: மேஜையின் மீது வைக்கப்பட்ட அறிக்கைப்படி பாமிலி ப்ளானிங் க்ளினிக்கில் வேலை செய்யக் கூடிய நர்சுகள் சரிவர வேலை செய்யவில்லை என்று தெரிய வருகிறது. அவர்கள் திருப்திகரமாக வேலை செய்யவில்லை என்றும் தெரிய வருகிறது. அப்படி அங்கே வேலை செய்யக் கூடிய உத்யோகஸ்தர்கள் திருப்திகரமாக வேலை செய்யவில்லையானால் ஏன் அந்தத் திட்டத்தைக் கைவிடக்கூடாது?

THE HON. SRI M. A. MANICKAVELU: திருப்திகரமாக வேலை செய்யாமல் இருப்பதால்தான் அவர்கள் திருப்திகரமாக வேலை செய்ய சிபாரிசு செய்து நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது.

Small-scale Industries

* 142 *Q*.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to set up a proto-type-*cum*-training factory in Madras State for the development of super precision instruments in the small-scale sector:

---

[a] Printed as Appendix III on pages 548–553 infra.